டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 5.9.2023 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.11, Issue: 67 - Madurai | Online Edition

# சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பினை வெளியிட்ட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கோவை, செப்.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் விலை முன்னறிவிப்பு திட்டமானது, சின்ன வெங்காயத்திற்கான விலை முன்னறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சின்ன வெங்காயம் தென்னிந்தியாவில் அதிகம் பயிரிடப்படு கிறது. வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் முதல் முன்கூட்டிய மதிப்பீடுகளின்படி (2022-23), தமிழ்நாட்டில் சின்ன வெங்காயம் 0.46 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 5.53 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. திண்டுக்கல், திருப்பூர், பெரம்பலூர், திருச்சி மற்றும் நாமக்கல் ஆகியவை சின்ன வெங்காயம் உற்பத்தி செய்யும் மாவட்டங் களாகும். தமிழ்நாட்டில் 80 சதவிகிதம் சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது.

வரும் மாதங்களில் சின்ன வெங்காயத்தின் விலை சீராக இருக்கும் என வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்போது, தமிழக சந்தைகளுக்கு கர்நாடகாவில் மாநிலம் சாம்ராஜ் நகரிலிருந்து வரத்து வருகிறது. மேலும், இன்னும் ஓரிரு வாரங்களில் கர்நாடகாவில் உள்ள கொள்ளேகாலிலும், தமிழ்நாட்டின் உடுமலைபேட்டை மற்றும் தாராபுரத்திலிருந்தும் வரத்து வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விலை முன்னறிவிப்பு குழு திண்டுக்கல் சந்தைகளில் நிலவிய சின்ன வெங்காயத்தின் விலை மற்றும் சந்தை ஆய்வுகளை மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், வரும் அக்டோபர் 2023 மாத இறுதி வரை தரமான சின்ன வெங்காயம் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ.45 முதல் 48 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

மேலும், கர்நாடகவிலிருந்து வரும் வரத்து மற்றும் பருவ மழையை பொறுத்து சின்ன வெங்காயத்தின் விலையில் மாற்றங்கள் இருக்கும், எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில் சந்தை முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

மேலும் விவரங்களுக்கு, உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் 641003. தொலைபேசி : 0422-2431405, இயக்குனர் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரி, நீர்மற்றும் புவியியல் ஆய்வு மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம் புத்தூர் 641003, தொலைபேசி : 6611278. தொழில்நுட்ப விவரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், காய்கறிப் பயிர்கள் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641003. தொலை பேசி : 0422 - 6611374.

## சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தேனீ வளர்ப்பு குறித்த ஏழு நாள் பயிற்சி

திருச்சி, செப்.4

தேசிய தேனீ வாரியத்தின் பங்களிப்பின் மூலம் தேனீ வளர்ப்பு பயிற்சியானது திருச்சி, சிறுகமணி வேளாண்மை நிலையத்தில் செப்டம்பர் 14ஆம் நாளிலிருந்து ஏழு நாட்கள் (18.09.2023 ஒரு நாள் தவிர்த்து) நடைபெற உள்ளது. அவ்வமயம், முதலில் வரும் 25 நபருக்கு முன்னுரிமை அடிப்படையில் பயிற்சி அளிக்கப்படும்.

விருப்பம் உள்ளவர்கள் 11.9.23க்குள் சிறுகமணி வேளாண்மை நிலையத்திற்க்கு நேரில் வந்து புகைப் படத்தினையும், ஆதார் அட்டை நகலினையும் இணைத்து விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் விபரங்களுக்கு திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிறுகமணி தொலைபேசி எண் : 0431 - 2962854 / 84899 81526 தொடர்பு கொள்ளலாம்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# நெல்லிக்காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோவை, செப்.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நெல்லிக் காயிலிருந்து மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி 7.9.23 மற்றும் 8.9.23 ஆகிய இரண்டு நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், (வாயில் எண்.7, மருதமலை சாலை வழி) கோவையில் நடைபெறும்.

கீழ்கண்ட உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

**நெல்லி பானங்கள்**

- பழரச பானம் மற்றும் தயார் நிலை பானம்
- நெல்லி ஜாம்
- தேன் நெல்லி, நெல்லி கேண்டி, நெல்லி மிட்டாய், பொடி மற்றும் துருவல்

ஆர்வமுள்ளவர்கள் ரூ.1,770/- (ரூ.1500 + GST 18%) - பயிற்சி முதல் நாளன்று செலுத்த வேண்டும்.

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003. தொலைபேசி எண் : 94885 18268, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


HEALTHY CROPS
HAPPY FARMER
SATHYAM Agro Clinic
QUALITY PRODUCT
சத்யம் அக்ரோ கிளினிக்
விதை முதல் விற்பனை வரை
வேளாண் மருத்துவ மையம்
சத்யம் விவசாயிகள் கிளப்
SATHYAM FARMERS CLUB
விதை முதல் விற்பனை வரை
விவசாயத்திற்கு தேவையான அனைத்தும் ஒரே இடத்தில்
சத்யம் அக்ரோ கிளினிக்
சத்யம் விவசாயிகள் கிளப் சிறப்பம்சங்கள்
• பயிர்களுக்கேற்ப மாதம் ஒருமுறை அல்லது இருமுறை கள ஆய்வு
• விற்பனை விலையிலிருந்து 50% விலை குறைந்து கொடுக்கப்படும்.
• காலை 10 மணிமுதல் மாலை 6 மணி வரை விவசாய ஆலோசனை வழங்கப்படும்.
• உரமிடுதல் பணியில் விவசாய பணியாளர் கூலியில் 50% பங்களிப்பு.
• விவசாய நிலங்களுக்கு இலவச மண் மற்றும் நீர் பரிசோதனை.
• விளைபொருட்களை அறுவடை செய்ய உதவி.
• விளைபொருட்கள் நியாயமான விலையில் கொள்முதல் செய்யப்படும்.
SATHYAM GROUP OF COMPANIES
Corporate Office : Ellis Nagar, Madurai - 625 016, Tamilnadu, India.
Unit - 1: Melamathur, Madurai - 625 234, Tamilnadu, India.
Unit - 2: Vadipatti, Madurai - 625 218, Tamilnadu, India.
For More Details Contact us: +91 75508 75508
Mail us : sales@sathyamagroclinic.com
www.sathyamagroclinic.com

# 88 விவசாயிகளுக்கு அரசு மானியத்துடன் கூடிய பவர் டில்லர் இயந்திரங்கள்

## வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்

மதுரை, செப்.4

மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 4.9.2023 அன்று வேளாண்மை பொறியியல் துறை சார்பாக வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, 88 விவசாயிகளுக்கு ரூ.186.56 இலட்சம் மதிப்பீட்டில் அரசு மானியத்துடன் கூடிய பவர் டில்லர் இயந்திரங்களை வழங்கி பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார், விவசாயிகளின் வாழ்வாதாரத்தினை பெருக்கும் நோக்கில் பல்வேறு முன்னோடி திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். சிறு, குறு விவசாயிகளின் தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு தேவையான நீர் ஆதாரத் தினை உருவாக்குதற்கு கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் சூரிய சக்தி பம்ப் அமைக்கும் திட்டம், பண்ணைக் குட்டைகள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, விவசாயத்திற்கு ஆட்கள் பற்றாக்குறை தீர்வு மற்றும் விளைச்சலை பெருக்கும் விதமாக வேளாண்மைப் பொறியியல் துறை வாயிலாக வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் வேளாண் இயந்திரங்கள் மகளிர் அல்லது சிறு, குறு அல்லது ஆதி திராவிட விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 50% மற்றும் பெரிய விவசாயிகளுக்கு அதிகபட்சமாக 40% மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முதலமைச்சர், மாநில அளவில் 5,000 விவசாயிகளுக்கு மானிய விலையில் பவர் டில்லர் வழங்கும் திட்டம் 4.9.23 காலை சென்னையில் தொடங்கி வைத்துள்ளார். அதனைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்தில் ரூ.186.56 இலட்சம் மதிப்பீட்டில் 88 பவர் டில்லர்கள் ரூ.74.80 இலட்சம் மதிப்பு அரசு மானியத்தில் 88 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு எப்போதும் உழவர்களின் உற்ற தோழனாக செயல்படும் என தெரிவித்தார்.

இவ்விழாவில், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), துணை மேயர் தி.நாகராஜன், வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறி யாளர் முரேஷ் குமார் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சங்கரன்கோவில் அங்கக விவசாயிகளுக்கு பங்களிப்பு உத்தரவாத திட்டத்தின்கீழ் பயிற்சி



திருநெல்வேலி, செப்.4

திருநெல்வேலி விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் ஜா.ரெனால்டா ரமணி, சங்கரன்கோவில் விதைச் சான்று அலுவலர் பரமேஸ்வரி மற்றும் அங்ககச்சான்று ஆய்வாளர் அ.ஷப்ரின், தென்காசி மாவட்டத்தில் அங்கக விவசாயம் செய்யும் விவசாயிகள் பங்களிப்பு உத்தரவாத திட்டத்தின் கீழ் இலவசமாக அங்கக சான்று பெற முடியும் என தெரிவித்தனர்.

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் பங்களிப்பு உத்தரவாத திட்டத்தின் செயல்முறைகள் மற்றும் பதிவேற்றம் செய்யும் வழிமுறைகள் விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. சான்றிதழ் பெற விரும்புவோர் ஒரே கிராமத்தை சேர்ந்த அல்லது அருகில் உள்ள கிராமங்களை சேர்ந்த அங்கக விவசாயிகள் குறைந்தபட்சம் ஐந்து நபர்களுக்கு மேல் குழுவாக அமைக்க வேண்டும். இதன் பிறகு குழுவிற்கான பெயர் மற்றும் தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும். பதிவு செய்யும் விவசாயிகள் உறுதிமொழி படிவம், பண்ணை விவரங்கள், ஆதார் அட்டை நகல், சிட்டா நகல், வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தில் நகல், நில சிட்டா, பான் கார்டு நகல் ஆகியவற்றை அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மூலம் பதிவேற்றம் செய்து இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பிக்க தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒரு குழுவில் உள்ள விவசாயி மற்றொரு குழுவில் உள்ள விவசாயிகளின் வயலை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கை சமர்ப்பிப்பார். ஆய்வு முடிவுகள் குழுவின் ஒப்புதலுக்கு வைக்கப் பட்டு முடிவு திருப்திகரமாக இருந்தால் சான்று வழங்கப்படும்.

பங்கேற்பாளர் உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் கட்டணம் இன்றி அங்கக சான்று பெற விவசாயிகள் விண்ணப்பிக்கலாம். தனிப்பட்ட விவசாயி அனுமதிக்கப்படாத இடுப்பொருட்களை பயன்படுத்தினால் அவர் குழுவில் இருந்து நீக்கப்படுவார். இதன் மூலம் உற்பத்தி மற்றும் விற்பனை பொருட்கள் ஜெய்விக் பாரத் என்ற இணைய தளத்தில் பதிவேற்றம் செய்து அகில இந்திய அளவில் வேளாண் வணிகத்தில் ஈடுபடலாம்.

# தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்க விழிப்புணர்வு வாகன பிரசாரம்

நாமக்கல், செப்.4

தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்க விழிப்புணர்வு வாகன பிரசாரம் நடைபெறுகிறது.




நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், சித்ரா, இது குறித்து வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், நாமக்கல் வட்டார வேளாண்மைத் துறை சார்பில் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் (ஊட்டமிகு சிறுதானியங்கள்) 2023-24 குறித்த திட்ட விளக்க விழிப்புணர்வு பிரசார வாகனத்தினை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி நாமக்கல் வட்டார உயிரியியல் கட்டுப்பாட்டு ஆய்வு கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அட்மா தலைவர் பழனிவேல் கலந்து கொண்டு, பிரசார வாகனத்தினை கொடி அசைத்து தொடங்கி வைத்து பேசினார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சித்ரா, கூறுகையில் சோளம், கம்பு, ராகி, வரகு, குதிரைவாலி உள்ளிட்ட சத்து மிகு சிறுதானியங்கள் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இந்த தானியங்களில் சிறப்பு, விதை மானியம், பயிர் பாதுகாப்பு திட்டங்கள் உள்ளிட்ட விபரங்கள் மக்களை சென்றடைய செய்ய வேண்டும்.

அனைத்து ஊராட்சியிலும் விவசாயிகளை சந்தித்து, தெளிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தினார். இது குறித்த துண்டு பிரசுரமும் வினியோகம் செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அலுவலர் மோகன், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோபிநாத், சதீஸ்குமார், பெரியசாமி, மாலதி, திலீப்குமார் மற்றும் வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை திட்ட அலுவலர்கள் இரமேஷ், கவிசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கிராம வேளாண் முன்னேற்றக் குழு கூட்டம்

திருச்சி, செப்.4

திருச்சி மாவட்டம், தொட்டியம் வட்டாரம், அரங்கூர் கிராமத்தில், அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கிராம வேளாண் முன்னேற்றக் குழு கூட்டம் நடைபெற்றது.

இக்குழு கூட்டத்திற்கு தொட்டியம் வட்டாரம், வேளாண்மை உதவி இயக்குனர் புஷ்பா சிவகுமார், தலைமை வகித்தார். ஊராட்சி மன்ற தலைவர் சரண்யா முன்னிலை வகித்தார்.




இக்குழு கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர், பேசுகையில் கிராம வேளாண் முன்னேற்ற குழுவின் நோக்கம், கலைஞரின் அனைத்து கிராமம் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடப்பு ஆண்டில் செயல்படுத்தப்பட உள்ள மத்திய மாநில திட்டங்கள், மானிய விபரங்கள் பற்றியும், திரவ உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பேக்டீரியா, ரைசோபியம், பொட்டாஷ் பாக்டீரியா ஆகியவற்றின் நன்மைகள் பற்றியும், சம்பா பருவத்திற்கு தேவையான நெல் விதைகள் டிகே எம் 13, ஏடிடி 54, திருச்சி 3, முதலிய ரகங்கள் வேளாண்மை விரிவாக்க மைய கிடங்குகளில் இருப்பில் உள்ளது எனவும், நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் வரப்பு பயிராக உளுந்து சாகுபடி செய்யுமாறும், சிறுதானியங்களான திணை, சாமை, வரகு, குதிரைவாலி முதலிய பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்யுமாறும் எடுத்து கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் கிருத்திகா கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அரங்கூர் கிராமத்தில் 300 பண்ணை குடும்பங்களுக்கு 1 அன்னை குடும்பத்திற்கு தல இரண்டு தென்னைக்கன்றுகள் வீதம் 600 தென்னைக்கன்றுகள் வழங்கப்பட உள்ளது. அனைத்து விவசாயிகளும் பயன் அடையுமாறு தெரிவித்தார்.




தோட்டக்கலை துறை சார்பில் வழங்கப்பட உள்ள பழமர கன்றுகள், காய்கறி விதைகள் அடங்கிய சிறு தொகுப்பு ஆகியவை மானியத்தில் வழங்கப்பட உள்ளது,

சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியத்தில் நுண்ணீர் பாசனம் அமைத்து தரப்படும் என உதவி தோட்டக்கலை அலுவலர் கபிலன் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாக அட்மா திட்டம் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சுகுந்தா அனைவரையும் வரவேற்று அட்மா திட்டம் கீழ் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் பற்றியும் கூறினார்.

இக்கிராம வேளாண் முன்னேற்றக் குழு கூட்டத்தில் 25க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காந்திகிராம பல்கலைகழக வேளாண் மாணவர்கள் அசோலா வளர்ப்பு குறித்து செயல்முறை விளக்கம்



திண்டுக்கல், செப்.4

திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைகழக வேளாண்மை மற்றும் கால்நடை அறிவியல் பள்ளியில், இளநிலை வேளாண்மை பட்டப்படிப்பு பயிலும் இறுதியாண்டு மாணவர்கள் பி.ரா.சந்துரு, கா.கோபால கிருஷ்ணன், க.கார்த்திக் ராஜா, செ.சியாம் சுந்தர், ஜெ.சரவண கிருஷ்ணன் ஆகியோர் தங்களின் இறுதியாண்டு பயிற்சியாக ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தில், கிராம தங்கல் திட்டத்தின் கீழ் அய்யம்பாளையம் பேரூராட்சியில் தங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். அதில் ஒரு பகுதியாக அசோலா தீவன வளர்ப்பு குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

காந்திகிராம வேளாண் மாணவர்கள் ஆத்தூர் வட்டாரத்தில் அமைந்துள்ள வேளாண்மை அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண்மை தொழில் நுட்பக் குழு அலுவலர்களுடன் இணைந்து 26ம் தேதி சனிக்கிழமை, பண்ணைப்பட்டியில் அமைந்துள்ள அன்னலட்சுமி என்பவரது விவசாயத் தோட் டத்தில் அசோலா வளர்ப்பு குறித்து செயல்முறை விளக்கம் அளித்தனர்.

மானிய விலையில் அவரது தோட்டத்தில் இரண்டு அசோலா தொட்டிகள் அமைக்கப்பட்டது. மேலும், அசோலாவின் இயல்பு, பராமரிப்பு மற்றும் பயன்பாடு குறித்தும் மாணவர்கள் விளக்கினர்.

முகக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக முகக் கவசம் அணிவோம்

# தேசிய வேளாண் சந்தை (e-NAM) - ஓர் பார்வை




விளைப்பொருட்கள் விற்பனையில் புரட்சி படைத்து வரும் இ.நாம் தேசிய வேளாண் சந்தை விவசாயிகளையும் வியாபாரி களையும் ஒன்றிணைத்து இ-நாம் செயலி வழியாக விற்பனையில் அதாவது ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பது நாம் அறிந்ததே. இந்த இ-நாம் எப்படி உருவானது மற்றும் செயல்பாடுகள் குறித்து விரிவாக பார்ப்போம்.

**இ-நாம் எப்போது உருவானது?**

சிறு விவசாயிகள் வேளாண் வணிக கூட்டமைப்பு (SFAC) வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகத்தின் கீழ் இ-நாம் செயல்படுகிறது. விவசாயிகளின் விளைப்பொருட் களை விற்பனை செய்வதில் எளிதாக்கிட இந்த நடைமுறை ஏப்ரல் 14, 2016ல் தொடங்கப்பட்டது. நாடு முழுவதும் உள்ள மண்டிகளை (ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை) இணையம் வாயிலாக ஒருங்கிணைப்பதன் மூலமாக விவசாயி களுக்கு கட்டுபடியான விலை கிடைப்பதை உறுதி செய்யும் நோக்கில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

செயல்பாடுகள் எப்படி தெரியுமா?

1) ஒரு விவசாயி தங்களுடைய விளைப்பொருட்களை வண்டியில் எடுத்துக்கொண்டு ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் வந்து விளைபொருட்களில் விபரங்கள் கணணியில் பதிவு செய்யப்பட்டு, லாட் (LOT) உருவாக்கம் செய்யப்படும்.

2) அடுத்ததாக விளைப்பொருட்கள் (சோளம், பருத்தி) மாதிரி மற்றும் தரம் (GRADE) சோதனை ஆய்வாளர்களால் (ASSAY ANALYSTS) பரிசோதிக்கப்படும்.

3) தரம் அறிந்த பின் மின்னணு முறையில் ஏலம் மேற்கொள்ளப்படும்.

4) விளைப்பொருட்கள் ஏலத்தில் வந்த பின்னர் எடை சரிபார்க்கப்பட்டு, விலைபட்டியல் விடுவிக்கப்பட்டு விற்பனை ஒப்பந்தம் (SALE AGREEMENT) ஏற்படுத்தப்படும்.

5) இறுதியாக விளைப்பொருட்கள் விற்பனை தொகையானது விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். (அதாவது காசோலை/RTGS/NEFT/INTERNET BANKING மூலமாக வழங்க படுகின்றன).

பின் விளைப்பொருட்கள் வெளியே வியாபாரிகள் எடுத்து செல் வது வரை அனைத்தும் பாதுகாப்பாக கனணியில் மேற் கொள்ளப்படும். விற்பனைத்துறை அலுவலர்களின் உதவியுடன் நேரடி வர்த்தகம் நடைபெறுவதால் இடைத்தரகு, கமிசன் இன்றி விவசாயிகள் விற்பனை செய்யலாம்.




**இதில் விவசாயிகளுக்கு வேறு என்ன சலுகை உண்டா?**

பண்ணை வாயில் வணிகம் (FARM GATE TRADING) இந்த முறையில் விவசாயிகளின் இருப்பிடத்திற்கு அதாவது விளை பொருட்கள் விளைந்த தோட்டத்திற்கே அலுவலர்கள் நேரில் சென்று இ-நாம் செயலி மூலமாக விற்பனை செய்து கொடுக்கப் படும். இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் ஏற்றுக் கூலி, போக்கு வரத்து வண்டி வாடகை போன்ற செலவினங்கள் குறைக்கும் நோக்கில் இந்த முறை பயன்படுத்தப்படுகிறது.

எனவே விவசாயிகளும் ஒற்றை உரிமம் பெற்ற வியாபாரிகளும் ஒன்றினைக்க இ-நாம் திட்டம் சிறப்பாக செயல்படுகிறது. இ-நாம் திட்டத்தால் ஒழுங்கு முறை விற்பனைக்கூடங்கள் நன்றாக செயல் படுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வேளாண் வறட்சி நிவாரண நிதி வழங்கி வேளாண் கட்டிடங்களை திறந்து வைத்தார் முதல்வர் ஸ்டாலின்

சென்னை, செப்.4

3907 பவர்டில்லர்கள் மற்றும் 293 விசை களையெடுப்பான் கருவிகளை விவசாயிகளுக்கு வழங்கியும், வடகிழக்கு பருவ மழை குறைவாக பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மிதமான வேளாண் வறட்சி நிவாரண நிதியினையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

வேளாண்மை-உழவர் நலத்துறை சார்பில் 3907 பவர் டில்லர்கள், 293 விசை களையெடுப்பான் கருவிகள் மற்றும் ரூ.279 கோடியில் கட்டப்பட்ட வேளாண் கட்டடங்களை திறந்து வைத்தும், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மிதமான வேளாண் வறட்சி நிவாரண நிதியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 4.9.23 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில், 62 கோடியே 42 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை திறந்து வைத்து, சிறிய வகை வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில் விவசாயிகளுக்கு 35 கோடி ரூபாய் மதிப்பிலான 3,907 பவர்டில்லர்கள் மற்றும் 293 விசை களையெடுப்பான் கருவிகள் வழங்கிடும் விதமாக மூன்று விவசாயிகளுக்கு பவர் டில்லர்கள் மற்றும் விசை களையெடுப்பான் கருவிகளுக்கான ஆணைகளை வழங்கினார்.

மேலும், வடகிழக்கு பருவமழை குறைவாக பெய்ததால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 181 கோடியே 40 இலட்சம் ரூபாய் மிதமான வேளாண் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியினை தொடங்கி வைக்கும் விதமாக மூன்று விவசாயி களுக்கு நிவாரண நிதி வழங்குவதற்கான செயல்முறை ஆணைகளை வழங்கினார்.

முகக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக முகக் கவசம் அணிவோம்


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அங்கக விவசாயிகளுக்கு வாய்ப்பு சான்றிதழ்

# பத்திர பதிவுத்துறை அமைச்சர் வழங்கினார்



மதுரை, செப்.4

மதுரை மாவட்டத்தில் விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் கீழ் பதிவு செய்து, தேசிய அங்கக தரநிலைகளின் படி அங்கக முறையில் விவசாயம் செய்து வரும் விவசாயிகளுக்கு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, வாய்ப்புச்






சான்றிதழை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் அங்கக வாய்ப்புச் சான்றிதழை நேற்று வழங்கினார்.

விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறையின் கீழ் பதிவு செய்யும் விவசாயிகளின் அங்கக பண்ணைகளை அங்ககச் சான்று ஆய்வாளர் மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் ஆய்வு செய்து ஆய்வறிக்கை விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று இயக்குநரகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது. பதிவு செய்ததி லிருந்து NPOP தர நிலைகள் முறையாக பின்பற்றி வரும் அங்கக விவசாயிகளுக்கு ஓர் ஆண்டு கழித்து அவர்களின் அங்கக பண்ணையின் அங்கக தன்மையை உறுதி செய்து வாய்ப்பு சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாண்டு மதுரை மாவட்டத்தில் தொடர்ந்து அங்கக சாகுபடி முறையில் ஈடுபட்டு வரும் பூங்குழலி, மலர்ச்செல்வி, சரஸ்வதி மற்றும் Auro lab (Govel Trust) ஆகியோருக்கு வாய்ப்பு சான்றிதழை வணிகவரி மற்றும் பத்திரப்பதிவு துறை அமைச்சர் வழங்கினார்.

விழாவின் போது மதுரை மாவட்ட ஆட்சியர், மதுரை மாநகர மேயர், வேளாண்மை இணை இயக்குநர் (பொ), விதை ஆய்வு துணை இயக்குநர், விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று உதவி இயக்குநர் மற்றும் அங்ககச்சான்று ஆய்வாளர் (பொ) ஆகியோர் உடன் இருந்தனர்.






# தென்னைநார் கழிவு மேலாண்மை – பயிற்சி



கடலூர், செப்.4

கடலூர் மாவட்டம், குள்ளஞ்சாவடி, பள்ளி நீர் ஓடை, அணுகம்பட்டு பஞ்சாயத்தில் இயங்கி வரும், எஸ்.கே.ஆர்.டிரேடர்ஸ், மொத்த கயிறு வியாபாரம் செய்யும் மையத்தில், மிகுதியாக தென்னை நார் கழிவு இருப்பது கண்டறியப்பட்டு, அவ்விடத்தில் சுற்றுவட்டார விவசாய பெருமக்களுக்கும், தொழில் ரீதியாக கோகோ பித் என்னும் தென்னை நார் கழிவு மக்கு உரம் தயாரிக்கும் தொழில் நுட்பத்தை முனைவர் காயத்ரி, நுண்ணுயிரியல் துறை, வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் செயல் விளக்க பயிற்சி செய்து காட்டினார். ப்ளீருரோட்டஸ் பூஞ்சை, யூரியா மற்றும் த.வே.ப. பயோ மினரலைசர் மக்கும் உரம் கொண்டு பயிற்சி அளித்தார். அலமேலு, ஏழுமலை ஊராட்சி மன்ற தலைவர் பங்கு பெற்று விவரம் கேட்டு அறிந்தார். இந்த நிகழ்ச்சியில் கல்குணம் காளான் தொழில் செய்யும் பெண் வர்த்தகர் கலந்து கொண்டு தென்னை நார்கழிவு, சிப்பி காளான் உற்பத்தி முறையாக செய்யும் தெளிவினை பெற்றார்.

# பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு நேரடி நெல் விதைப்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி



சிவகங்கை, செப்.4

சிவகங்கை மாவட்டம், கல்லல் வட்டாரத்திலுள்ள சாத்தம்பதி, விசாலயன் கோட்டை, விஜயாபுரி கிராம நெல் டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கு ரிலையன்ஸ் பவுண்டேசன் சார்பாக நேரடி கள பயிற்சி 1.9.23 அன்று நடைபெற்றது. இந்த கள பயிற்சியை துவக்கி வைத்த மாவட்ட திட்ட மேலாளர் ஸ்ரீ கிருபா பேசுகையில், இந்த பண்ணை பள்ளி மூலமாக நெல் மற்றும் பயறு வகை பயிர்களில் சாகுபடி செலவை குறைத்து அதிக வருமானம் பெறக்கூடிய பயிர் சாகுபடி தொழில் நுட்பங்களை வாட்சாப் மற்றும் அலைபேசி, நேரடி களப்பயிற்சி வாயிலாக வழங்க படுவதாகவும் விதையில் இருந்து விற்பனை வரை தகவல் அந்தந்த பருவத்திற்கேற்றவாறு வழங்கப்படும் என்றார்.




களப்பயிற்சியில் தொழில்நுட்ப வல்லுநர் சந்திர சேகரன் கூறுகையில், மானாவாரியில் அதிக மகசூல் தரக்கூடிய ரகங்களை (ஆடுதுறை 39, 53, பி.கே.எம் 15, கோ 53, 55 ஜோதி மட்டை) போன்ற நெல் விதைகளை வாங்கி வறட்சியை தாங்கிட ஏற்றவாறு விதைகளை கடினப்படுத்தல் (SEED HARD-NING) (ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் பொட்டாஷ் விதம் கலந்து 16 மணி நேரம்) ஊறவைத்து பின் நன்றாக நிழலில் காய வைத்து விதை நேர்த்தி மருந்து கலந்து 24 மணி நேரம் கழித்து விதைக்கும் கருவி கலப்பை மூலமாக விதைத்தால் உரிய ஆழத்தில் விதைகள் நிலத்தில் விழும் பயிர் எண்ணிக்கையும் பராமரிக்கப்படும். கடைசி உழவில் நெல் நுண்ணூட்ட உரம் ஏக்கருக்கு 5 கிலோ வீதம் இட வேண்டும் என்றார்.




கால்நடைகளுக்கு தேவையான அசோலா வளர்ப்பு குறித்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. பயிறு வகைகளில் உளுந்து விதைப்பு பற்றி எடுத்துக் கூறப்பட்டது. மேலும் விபரங் களுக்கு கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக 1800 419 8800 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்ளப் பட்டது. கல்லல், காளையார் கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைமுறையில் விவசாயி களுக்கான செயல்படுத்தும் மானியங்கள் இதர திட்டங்கள் குறித்து அலுவலர்களுடன் விவாதிக்கப்பட்டது. இடுபொருள் இருப்பு விபரங்களை விவசாயிகள் எளிதாக தெரிந்து கொள்ள உழவன் செயலி பயன்படுத்த விவசாயிகளிடம் கூறப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கள அலுவலர் லிபிகா ராமு சிறப்பாக செய்திருந்தார்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தேனீ வளர்ப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி

கோவை, செப்.4

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், பூச்சியியல் துறை சார்பாக ஒவ்வொரு மாதமும் தேனீ வளர்ப்பு சம்பந்தமான ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. செப்டம்பர் மாதத்திற்கான பயிற்சி, 7.9.23 வியாழக்கிழமை அன்று அளிக்கப்படும்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

- தேனீ இனங்களை கண்டுபிடித்து வளர்த்தல்
- பெட்டிகளில் தேனீ வளர்க்கும் முறை மற்றும் நிர்வாகம்
- தேனீக்கு உணவு தரும் பயிர்கள் மற்றும் மகரந்த சேர்க்கை மூலம் மகசூல் அதிகரிக்கும் பயிர்களின் விவரம்
- தேனைப் பிரித்தெடுத்தல்
- தேனீக்களின் இயற்கை எதிரிகள் மற்றும் நோய் நிர்வாகம்

பயிற்சியில் கலந்துகொள்ள விழைவோர், பயிற்சி நாளன்று காலை 9.00 மணிக்கு பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு வந்து அடையாள சான்று சமர்ப்பித்து பயிற்சிக் கட்டணம் ரூ.590/- (ரூபாய் ஐநூற்று தொண்ணூறு மட்டும்) நேரிடையாக செலுத்த வேண்டும். பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சியானது காலை 9.00 முதல் மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு, பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் பூச்சியியல் துறை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், தொலைபேசி : 0422-6611214, மின்னஞ்சல் : entomology@tnau.ac.in தொடர்பு கொள்ளவும்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# உளுந்து சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி



விருதுநகர், செப்.4

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பெருமக்களுக்கு உளுந்து தொகுப்பு முன்னிலை செயல் விளக்க திடல் திட்டத்தின் கீழ் உளுந்து சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர்






முனைவர் செல்விரமேஷ், தலைமை தாங்கி உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெறுவதற்கான உழவியல் தொழில் நுட்பங்கள், களைகளை கட்டுப்படுத்த பின்பற்ற வேண்டிய தொழில்நுட்பங்கள், தரமான விதைகளின் முக்கியத்துவத்தை தலைமையுரையில் எடுத்து கூறினார். தொடர்ந்து முனைவர் ஷீபா, இணை பேராசிரியர், உளுந்து வம்பன் 11 சிறப்பியல்புகளை கூறினார்.

முனைவர் வேணுதேவன், உதவி பேராசிரியர், உளுந்து சாகுபடியில் பின்பற்ற வேண்டிய விதை நேர்த்தி முறைகளை பற்றி விளக்கமளித்தார். மேலும் முனைவர் உஷாராணி, இணை பேராசிரியர், உளுந்து சாகுபடியில் பின்பற்ற வேண்டிய பூச்சி மற்றும் நோய் மேலாண்மை பற்றி தெளிவாக எடுத்து கூறினார். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாய பெருமக்களுக்கு உளுந்து தொகுப்பு முன்னிலை செயல் விளக்க திடல் அமைக்க ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய தேவையான இடுபொருட்கள் வழங்கப்பட்டது. இப்பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயணடைந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# சிறுதானியங்களிலிருந்து பனிக்கூழ் (ஐஸ்கிரிம்) தயாரித்தல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி



மதுரை, செப்.4

மதுரை மாவட்டம், ஒத்தக்கடை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ‘சிறுதானியங்களிலிருந்து பனிக்கூழ் (ஐஸ்கிரிம்) தயாரித்தல் பற்றிய செயல்விளக்கப் பயிற்சி 4.9.23 அன்று காலை 10.30 மணியளவில் நடைபெற்றது.

இச்செயல் விளக்கப் பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் முனைவர் இ.சுப்பிரமணியன், சிறுதானியங்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் மற்றும் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தார். முனைவர் ஜெ.செல்வி, உதவிப் பேராசிரியர் (மனையியல்), சிறுதானியங்களிலிருந்து பனிக்கூழின் (ஐஸ்கிரிம்) முக்கியத் துவம், சத்துக்கள், பயன்கள் பற்றி எடுத்துரைத்தார்.

அருணாசலம், தொழில்முனைவோர் மற்றும் சிறுதானியங் களிலிருந்து பனிக்கூழ் (ஐஸ்கிரிம்) தயாரித்தல் பற்றிய பயிற்சியினை செயல் விளக்கத்துடன் செய்து காட்டினார். இச்செயல் விளக்கப் பயிற்சியில் கேழ்வரகு, கம்பு மற்றும் இதர சிறுதானிய ஐஸ்கிரிம் தயாரித்தல் பற்றி செயல் விளக்கத்துடன் எடுத்துரைத்தார்.

இதில் 45 உழவர் உற்பத்தியாளர் கூட்டமைப்புகள், விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர்கள் கலந்து கொண்டு சிறுதானிய ஐஸ்கிரிம் தயாரித்தலின் முக்கியத்துவம், சத்துக்கள், மருத்துவ பயன்கள் மற்றும் சிறுதானிய ஐஸ்கிரிம் தயாரித்தல், பற்றிய செயல் விளக்கத்துடன் தெரிந்து கொண்டனர்.

இச்செயல்விளக்கப் பயிற்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு உரையாற்றினர். வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட உதவியாளர் முனைவர் விஜயலலிதா, இப்பயிற்சியினை சிறந்த முறையில் நடத்த ஏற்பாடு செய்தனர்.

# அங்கக வேளாண்மை விவசாயிகளுக்கு பயிற்சி

அரியலூர், செப்.4

அரியலூர் மாவட்டம், இளையபெருமாள்நல்லூர் கிராமத்தில் 2023-24ஆம் ஆண்டு பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் அங்கக வேளாண்மை செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் குழு கண்டறியப்பட்டு அக்குழுவில் உள்ள விவசாயிகளுக்கு முதற்கட்ட பயிற்சி ஜெயங்கொண்டம் வேளாண்மை உதவி இயக்குநரால் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில் பயிர் பூச்சி விரட்டிகளான மூலிகை கரைசல், கற்பூர கரைசல், இஞ்சி பூண்டு கரைசல் ஆகியவற்றின் பயன்பாடு குறித்தும் அவற்றை தயார் செய்யும் முறைகள் பற்றியும் வேளாண்மை உதவி இயக்குநர் த.சுப்ரமணியன் விளக்கமாக




எடுத்து கூறினார். ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளான ஏற்ற பருவத்தில் பயிர் சாகுபடி செய்தல், கலப்பு பயிர் சாகுபடி செய்யும் முறை, கோடை உழவு, பயிர் சுழற்சி முறைகள் பற்றி துணை வேளாண்மை அலுவலர் பூ.கோவிந்தசாமி, தெளிவாக எடுத்து கூறினார். அங்கக வேளாண்மையில் டி.விரிடி, சூடோ மோனாஸ், உயிரி உரம் மற்றும் பஞ்சகாவியம், தேமூர் கரைசல் போன்றவற்றை தயார் செய்யும் முறை பற்றியும் இன்றைய அங்கக வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் சோழமாதேவி கிரீடு முஏமு தொழில்நுட்ப வல்லுநர் எம்.அசோக்குமார், தெளிவாக எடுத்துரைத்தார். முன்னதாக வேளாண்மை உதவி அலுவலர் கோவிந்தராஜ் அனைவரையும் வரவேற்றார். வேளாண்மைத்துறை செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து பாலாஜி விளக்கினார். தொகுப்பு ஒருங்கிணைப்பாளர் சரண்யா நன்றி கூறினார்.

# விவசாயிகள் விஞ்ஞானிகள் கூட்டு ஆய்வு

திருச்சி, செப்.4

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம், எசனைகோரை கிராமத்தில் சின்னதுரை அங்கக வேளாண்மையில் சாகுபடி செய்துள்ள நெல் வயலில் நேரடி வயல் ஆய்வு செய்யப்பட்டது.



இதில் லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சுகுமார் பேசுகையில், நெல் வயலில் ஒருங்கிணைந்த பயிர்






மேலாண்மை பற்றியும் திருந்திய நெல் சாகுபடி, கோனோ வீடர் கொண்டு களை எடுத்தல், இயற்கை இடுபொருட்கள் பயன் படுத்துதல் உயிர் உரங்கள் விதை நேர்த்தி, அங்கக சாகுபடி முறையில் நெல் சாகுபடி தொழில் பற்றி விரிவாக விளக்கிக் கூறினார்.

வேளாண்மை கல்வி நிலையம் குமுளூர் உதவி கல்வியாளர் டாக்டர் விஜய், வயல் ஆய்வு செய்து நன்மை செய்யும் பூச்சிகள் தீமை செய்யும் பூச்சிகள் அடையாளம் கண்டு விவசாயிகளுக்கு விரிவாக விளக்கி கள ஆய்வு செய்து காண்பித்தார்.

மேலும் நெல் குருத்து பூச்சி, இலை சுருட்டு புழு போன்ற தீமை செய்யும் பூச்சிகள் அடையாளம் கண்டு முட்டை ஒட்டுண்ணி டிரைக்கோ கிரம்மா ஜப்பானிக்கம் பயன்படுத்துதல், இயற்கை

இடுபொருட்கள் பயன்படுத்துதல், வேம்பு பூச்சிக்கொல்லி பயன்படுத்துதல், பறவை தாங்கி அமைத்தல் நீர் மேலாண்மை செய்தல் பற்றி விவசாயிகளுக்கு கள ஆய்வு செய்து வருகை தந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கி கூறினார். மேலும் இக்கூட்டு ஆய்வில் கலந்து கொண்ட எசனைக்கோரை சார்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இதற்கான ஏற்பாட்டினை வேளாண்மை உதவி அலுவலர் ராஜசேகரன், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச் செல்வன், உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக், அட்மா திட்ட உழவர் நண்பர் நந்தகுமார் ஆகியோர் செய்திருந் தனர். மேலும் இந்த வயல் ஆய்வின் போது திண்டுக்கல் காந்திகிராமிய பல்கலைக்கழக இளங்கலை வேளாண்மை மாணவர்கள் த.வெங்கடேஷ், செ.நவீன் சுந்தர், த.சக்தி பாலாஜி, மு.தானு மலைய பெருமாள் மற்றும் பொ.அழகு பாண்டியன் கலந்து கொண்டு கள ஆய்வு செய்வது பற்றி தெரிந்து கொண்டனர்.

